வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ஈழத்துப்பெண்ணியக் கவிதைகளில் பெண்ணுடல் அரசியல்

தி.சுதேஷ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்எம்கே கலை அறிவியல் மகளிர் கல்லூரி,
துறையூர்

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய சமூகத்தில் பால், நிறம், இனம், சாதி, மொழி, சமயம் போன்ற பல்வேறு காரணிகள் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. அவற்றுள் பால்பாகுபாட்டின் அடிப்படையில் உருவாகும் வேறுபாடுகள் பெண்களை அடிமைப்படுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு மனிதரும் அவரவர் பிறப்புறுப்புகளின் அடிப்படையில் ஆண் என்றும் பெண் என்றும் பாகுபாடு செய்யப்படுகின்றனர். தாயின் கருவறையில் தீர்மானிக்கப்படும் பால்பாகுபாடு, பெண்களின் உடலமைப்பில் காலந்தோறும் ஏற்படும்; உடல்சார் மாற்றங்களின் அடிப்படையில் மேலும் வளர்த்தெடுக்கப்படுகின்றன. பெண்ணின் உடலை நுகர்பொருளாகவும், இழிவானதாகவும் ஆணாதிக்கச் சமூகம் கருதுகின்ற சூழலில் அக்கருத்தியலை எதிர்த்துத் தங்களின் உடலைக் குறித்துப் பெண்கள் பெருமிதம் கொள்வதோடு அதனைப் போராட்டக்கருவியாகப் பார்க்கும் மனப்பான்மையைத் தீவிரவாதப் பெண்ணியம் முன்வைத்துள்ளது. தீவிரவாதப் பெண்ணியக் கோட்பாடுகளின் எழுச்சியால் பெண் தன் உடலைக் குறித்துக் கொள்ளும் கற்பிதங்கள் பெண்ணுடல் அரசியல் என்னும் கருத்தாக்கமாக உருவெடுத்துள்ளது. இத்தகைய கருத்தாக்கத்தை ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள் சித்திரிக்கும்; திறத்தை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

**திறவுசொற்கள்**

பெணணியம், பெண்ணுடல், பாலியல் வேறுபாடு, நுகர்வு, வன்புணர்வு, பாலியல் வன்முறை, கலகக்குரல்.

**முன்னுரை**

பெண்ணியம் பலவகையான சிந்தனைப்போக்குகளையும் செயல்பாடுகளையும் கொண்டுள்ளது. ஆணுடனான பாலியல் உறவினையும், கணவனையும், கருவறையையும், பிள்ளை வளர்ச்சியையும், குடும்ப அமைப்பையும் மறுப்பது என்பது ஒரு வகை. குடும்பத்தையும் பிற உறவுகளையும் ஏற்றுக்கொண்டாலும் உரிய இடம், உரிய பங்கு, உரிய மரியாதை முதலியவற்றைக் கேட்பது அல்லது எடுத்துக்கொள்வது என்பது மற்றொரு நிலையாகும். தனது உடல் பற்றிய பெருமிதமும் தனது மொழி பற்றிய அக்கறையும் கொண்டிருப்பது அல்லது வெளிப்படுத்துவது என்பது இன்னொரு முக்கியமான நிலையாகும். பொதுவாக சமூக அரசியல் தளங்களில் அதிகாரப் பகிர்வுகளைக் கேட்பதும் பெண்கள் சந்திக்கும் பொதுவான அவலங்களையும் அபாயங்களையும் களைய முற்படுவதும் முக்கியமான செயல்பாட்டு வடிவங்களாகக் காணப்படுகின்றன. இத்தகைய பெண்ணியக் கருத்தாக்கங்களுள் பெண்ணுடல் அரசியல் என்னும் கருத்தாக்கத்தை ஈழத்துப்பெண்ணியக் கவிதைகளில் பொருத்தி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்ணுடல் அரசியல் - கருத்தாக்கம்**

பெண்ணுடலைப் பெண் இழிவாகக் கருதாமல் அதனைச் சிறப்பானதாகக் கொண்டாடவேண்டும் என்று பெண்ணியவாதிகள் சொல்கின்றனர். இந்தக் கருத்து மில்லட் என்பவரின் கருத்தாகும். "ஆண் பெண் இருபாலர்க்குமிடையே உள்ள அதிகார உறவுமுறையை (power relationship) மில்லட் தனது பாலியல் அரசியல் (sexual politics) என்ற நூலில் விரித்துப் பேசுகின்றார்." (தே.ஞானசேகரன், பெண் வழக்காறுகள், ப.76)

பெண் படைப்பிற்கும் பெண் உடலுக்கும் இடையே உள்ள தொடர்பை , இணக்கத்தை, உயிர்ப்பை, ஆற்றலை எடுத்துரைப்பது பெண்மொழியின் ஒரு கூறாகும். பிரதியில் பெண் உடம்பு எழுதப்பட்டிருக்கும் பாங்கை இனம் கண்டு கொள்வதும், அப்படைப்பில் இடம்பெறும் படிமங்களுக்குப் பெண் உடல் ஊற்றாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டறிவதும், பல நூற்றாண்டுகளாக எழுதப்படாத பெண் உடல் அனுபவங்களைப் பெண் பார்வையிலிருந்து எழுதுவதும் பெண் உடல் மொழியாகும். நவீனகாலத்தில் பெண் உடல் பற்றிய சிந்தனைகள் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

பெண்ணியத்தின் பேரறிஞராகக் கருதப்படும் ஹைலன் சிக்ஸி , "பெண் தன் உடம்பை எழுதவேண்டும். …. அவளுக்கே உரிய பொருட்களையும் அவளுக்கே உரிய உறுப்புகளையும் ஆழமாகப் புதையுண்டு அடையாளம் இழக்கர்ல் கிடக்கும் அவளது உடம்பு சார்ந்த மிகப்பெரிய

ஆட்சிப்பரப்பையும் மீண்டும் ஆதிவலுவோடு திரும்பப்பெற்று எந்த விதமாகவும் தன்னைத்தானே தணிக்கை செய்துகொள்வதைத் தவிர்த்து அப்படியே பொங்கி வழியவேண்டும்” என்று சுட்டியுள்ளார். (அரங்கமல்லிகா, பெண்ணும் பெண்மையும், ப.31)

அட்ரின்சிர் என்பார் “ உடலைப் பற்றி நான் எழுதுவது என்பது எனக்கான அனுபவத்தை வெளிப்படுத்துவது ஆகும். அதில் உள்ள வடுக்கள், வடிவமின்மைகள், அழிவுகள், சிதைவுகள், மாற்றங்கள், இழப்புகள் ஆகியன பற்றியும் அதே சமயத்தில் எனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அனுபவங்களைப் பற்றி எடுத்துரைப்பதாகும்” என்கிறார். (மீனாட்சி முருகரத்தினம், பெண்ணியச் சிந்தனைகள், ப.16)

**பெண் உடலால் ஒடுக்கப்படுதல்**

புகழ்பெற்ற பிரெஞ்சு புதினப்படைப்பாளரும் பெண்ணியச் சிந்தனையாளருமான சிமோன் டி பிவார் பின்வருமாறு எழுதியுள்ளார். ‘ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை. மாறாக அவ்வாறு மாற்றப்படுகிறார்” (நிழல்வண்ணன், குடும்ப அமைப்பு முறையும் பெண்கள் விடுதலையும், ப.14)

பிறப்பில் ஒரு குழந்தை அது பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும் ஒரு குழந்தைதான். பாலியல் உறுப்புகளின் வேறுபாடு தவிர அவர்களுக்கிடையில் வேறு எந்த வேறுபாடும் இல்லை. அவர்களுடைய குழந்தைப்பருவ நடவடிக்கைகளில் எந்த வேறுபாடும் இருப்பதில்லை. அழுவது, உணவு உண்பது, பருகுவது என்று எதிலும் வேறுபாடு இருப்பதில்லை. குழந்தைகளில் பாலியல் வேறுபாடு என்பது ஓர் இயற்கையான வேறுபாடு ஆகும். இந்த வேறுபாடு காரணமாகவே ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் ஈடு செய்கின்றனர். ஆனால் குழந்தை பிறந்த உடனேயே அது குடும்பம் மற்றும் சமுதாயத்தின் தாக்கத்தைப் பெறத் தொடங்கிவிடுகிறது. பெண் படிப்படியாக அவளுடைய பெண்பாலியல் மற்றும் தாழ்வு நிலையில் உள்ளவளாக அறியச் செய்யப்படுகிறாள். ஆணோ படிப்படியாக அவனுடை;ய ஆண் பாலியல் மற்றும் மேலான நிலையில உள்ளவனாக அறியச் செய்யப்படுகிறான். பெரும்பாலான குடும்பங்களில் உணவு, பானம், உடை;கள், கல்வி இன்ன பிறவற்றில் ஆணுக்கு முன்னுரிமைகள் அளி;க்கப்படுகி;ன்றன. இந்தப் பாகுபாடு நமது சமூக நிலைமைகளில் அதில் எந்தத் தவறும் இருப்பதாக நினைக்கமுடியாத அளவுக்கு மிகவும் நிறுவப்பட்டுள்ளது. அதை யாரும் கேளவி கேட்பதில்லை. இருப்பினும் பெண் குழந்தை அவளுக்கு எதிரான இந்தப் பாகுபாட்டை அறிந்தே இருக்கிறாள். மேலும் அதன் விளைவாகவே அவளுடைய ஆளுமை படிப்படியாகத் துணிவற்றதாக ஆக்கப்படுகிறது.

சாதி,மதம் , இனம் இவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூக கட்டமைப்புகள் பெண்ணின் உடலை மையமாக வைத்து இயங்குகின்றன. இங்கு பெண் உடல் ஆண் ஆதிக்கம் செலுத்தும் இடமாக உள்ளது. ஆணைப் போலவே பெண்ணின் பாலியல் வேட்கையும் பரந்துபட்டது. ஆனால் நம் சமூக அமைப்பில் குடும்பநிறுவனம் பல கட்டுப்பாடுகளோடு இதனை வரைமுறைப்படுத்துகிறது. இங்குப் பெண்ணின் உடல் ஒற்றைப் பாலியலுக்குள் ஒடுக்கப்படுகிறது. ஆனால் ஆண் தன் பரந்துபட்ட பாலியல் துய்ப்பை இச்சமூக அமைப்பின் ஒப்புதலோடு நிறைவேற்றிக் கொள்கிறான்

**தீட்டு- சுத்தமும் அசுத்தமும்**

தொடக்க காலத்தில் உடல் ரீதியாகச் சக்தி வாய்ந்த பாலினமாகப் பெண்கள் கருதப்பட்டனர். வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்நத காலத்தில் பெண்ணைச் சார்ந்து ஆண்கள் வாழ்ந்தார்கள். பின்னர் உற்;பத்தி பெருகி ஆணாதிக்கம் தலைதூக்கியது. இதன் மூலம் தாய்வழிச் சமூகம் ஒடுக்கப்பட்டு தந்தை வழிச் சமூகம் முதன்மைப் (தலைமை) பெற்றது. பெண் உடல் பலவீனமானது என்ற கருத்தை மதங்களும் கூறுகின்றன. இதன் தொடர்ச்சியாகப் பெண்ணுடல் அனுபவிக்கத்தக்க அழகு, சுகம், போதை தரும் பொருளாகவும் காட்டப்படுகின்றன.

மாதவிலக்கு பிள்ளைப்பேறு போன்றவற்றால் பெண்ணுடல் எல்லாக் காலங்களிலும் ஒதுக்கப்பட்டே வருகின்றது. ஒரு பெண் சிறுமியாக இருக்கும் பொழுது கோயிலுக்குள் தடையின்றி நுழைய எந்த விதத் தடையும் இல்லை. ஆனால் பூப்படைந்த பின்னால் கோவிலுள் நுழைவதற்கு தடை போடப்படுகிறது. ஏனெனில் மாதவிலக்கு பெண்ணுடலில் ஏற்படுவதால் பெண்ணுடல்(அழுக்கானவையாக) அசுத்தமானவையாகக் கருதப்பட்டு தடை செய்யப்படுகிறது. ஒருவனுக்கு மணம் செய்துதரும் வரை பெற்றோர்களால் அவள் உடல் கண்காணிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டும், திருமணத்திற்குப் பின் கணவனால் கண்காணிக்கப்பட்டும் பாதுகாக்கப்படுகிறது.இதனால் தான் சமூகத்தின் பிடிக்குள் களிமண் பொம்மைகளாக உருவாகும் உடலை விடுவிப்பதும், உடலை அறிவதும், பேசுவதும், போற்றுவதும் பெண்ணிய அரசியல் முக்கியப் பணியாக மேற்கொள்கிறது.

**தமிழ்ச்சமூகத்தில் பெண்ணுடல் குறித்த கற்பிதங்கள்**

பெண்ணுடல் குறித்த கற்பிதங்களை ஒவ்வொரு சமூகமும் பல்வேறு நோக்கில் முன்வைக்கிறது. தமிழ்ச்சமூகத்தில் உடலானது தீட்டு, அருவெறுப்பு, நுகர்வு என்பதற்குரியதாக ஒருபுறம் கருதுகிறது. மற்றொரு புறம் வளமை, அழகு, புனிதம், கற்பு, தாய்மை இவைகளின் கூட்டிணைவாகவும் காண்கிறது. அறஇலக்கியங்கள் பெண் உடல் மீதான

வெறுப்புச்சிந்தனையை உருவாக்கின. அதன் தொடர்சசியாகப் பக்தி இலக்கியங்கள் பெண்ணை மோகினியாகவும் பிசாசாகவும் காண்பித்தன. சித்தர் இலக்கியங்கள் பெண்ணுடலை அருவருப்பிற்குரியதாகவும் மனிதத்துன்பத்திற்குக் காரணமானதாகவும் சுட்டுகின்றன. இவ்வாறாக "இவ்விலக்கியங்கள் பெண்வெறுப்புச் சிந்தனைகளைச் சமூகத்தில் நிலைநிறுத்தியுள்ளன.பெண் உடல் பற்றிப் புனையப்'படும் பெண் வெறுப்புச்சிந்தனைகள் சமூகத்தின் பொதுப்புத்தித்தளத்தில் வினையாற்றுகின்றன. காலப்போக்கில் நின்று நிலைத்து விடுகின்றன" (அ.ஆரோக்கிய ஜெயசீலி, பெண் தன்வரலாற்றுப் பதிவுகள், பக்.140-141)

**ஈழத்துப்போர் பின்னணியில் பெண்ணுடல்**

இலங்கையில் பல ஆண்டுகளாக நடைபெற்றுவந்த இனப்பாகுபாட்டின் விளைவாகத் தொடர்ந்து போர்களும் வன்முறைகளும் நிகழ்ந்து வந்தன. இன்றும் தொடர்கின்றன. சிங்களரின் ஆதிக்கத்தால் ஈழத்தமிழர் ஒடுக்கப்பட்டதோடு அடிப்படை உரிமைகள் இன்றி இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டனர். தமிழ்ப்போராளிகளின் தாக்குதலையும் உத்திகளையும் எதிர்கொள்ள இயலாத சிங்கள இராணுவத்தினர் தங்களின் இயலாமையை ஈழத்துப்பெண்கள் மீது அரங்கேற்றினர். ஈழப்பெண்களைக் கைதுசெய்வதும், நிர்வாணப்படுத்தியதும், கூட்டாகப் பாலியல் வன்புணர்ச்சி மேற்கொண்டதும், பெண்ணுறுப்புகளைச் சிதைத்ததுமான கொடிய செயல்களை நிகழ்த்தினர். இத்தகைய கொடுமைகளை ஈழத்துக்கவிதைகள் பதிவுசெய்துள்ளன.

**பாலியல் வன்முறை**

பெண்ணுடல்மீது திணிக்கப்படும் வன்முறைகளுள் மிகக் கொடியதாகப் பாலியல் வன்முறை விளங்குகிறது. " பாலியல் வன்முறை என்பது உடல் மற்றும் உள்ளம் சார்நத சுயமரியாதையை மறுத்துத் தொடுக்கப்படும் தாக்குதல்" (க.வி.இலக்கியா, பெண் விடுதலை இன்று, ப. 34). இது அனைத்து வயதினருக்கும் பாலினத்தவருக்கும் பொருந்தும். இநத மறுத்தலில் தான் பாலியல் பொருளாக்கத்திற்கான விதைகளும் ஊன்றப்படுகின்றன.

"போரிலும் பகையிலும் முதல் பொருளாய்
அவளையே சூறையாடினாய்
அவளுக்கே துயரிழைத்தாய்
உன்னால் அனாதைகளாக்கப்பட்ட
குழந்தைகளையெல்லாம்
அவளிடமே ஒப்படைத்தாய்"

என்னும் கவிதையில் போரிலும் பகைதீர்த்தலிலும் பெண்கள் துன்புறுத்தப்படுவதைப் பஹீமா ஜஹான் ஆதித்துயர் நூலில்பதிவுசெய்துள்ளார்.

மேலும் சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்டுப் பின்னர் பெண்குறிக்குள் வெடிகுண்டைச் செலுத்திச் சிதைக்கப்பட்ட கோணேஸ்வரியைக் குறியீடாக்கிக் கலா "கோணேஸ்வரிகள்" என்னும் கவிதையைப் படைத்துள்ளார்.

"வீரர்களே
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்
என் பின்னால்
என் பள்ளித்தங்கையும் உள்ளாள்
தீர்;ந்ததா எல்லாம்
அவளோடு நின்றுவிடாதீர்
எங்கள் யோனிகளின்ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்
ஆகவே வெடிவைத்தே சிதறடியுங்கள்"

என்று தம்கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**பெண்ணின் கலகக்குரல்**

ஆணாதிக்கச்சிந்தனைகளுக்கு எதிராகத் தன்னைக் குறித்துச் சித்திரிக்கும் பெண் உணர்வுகளைக் கலகக்குரலாக அனாரின் ஓவியம் வரையாத தூரிகை கவிதைத்தொகுப்பு வெளிப்படுத்துகிறது.

'நீ நினைத்தபடி
சேர்க்கவும் கழிக்கவும்
செப்பனிடவும்
களிமண் பொம்மையல்ல
மூக்கும் முழியும்
மூளையும் உள்ள பெண்"

என்று முழக்கமிடுகிறார்.

இந்திய அமைதிப்படையினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் இருப்பையும் மனத்துயரையும் கஸ்தூரியின் கவிதை வெளிப்படுத்துகிறது.

"அமைதி காக்க வந்தவர்கள்
என் வாழ்வின் அமைதியைக் கெடுத்தனரே

புகுந்தனரே என் வீட்டினுள்
பதறியது என் தேகம்
பாய்ந்தனர் என்மீது
பதம்பார்த்தனர் என் உடலை
குரங்கின் கையில் அகப்பட்ட
மாலையாய் ஆனதோ என் உடல்
உடல் முழுக்க நோ
உள்ளத்திலோ பாரம்- ஆனாலும்
என் இருப்பு உறுதியானது”

என்னும் கவிதையில் அமைதி ஏற்படுத்தச் சென்ற இந்திய அமைதிப்படை ஏற்படுத்திய பாலியல் வன்முறையைக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள் இன்று இலங்கையிலிருந்தும், ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து சென்றுள்ள பிற நாடுகளிலிருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதழ்களிலும் மின்னணு ஊடகங்களிலும் தங்கள் கவிதைகளை அவர்கள் பதிவுசெய்துள்ள போதிலும் இன்று பரவலான எண்ணிக்கையில் அவர்களின் கவிதைத்தொகுப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இக்கவிதைகளில் பெண்ணுடலை அழகியல் நோக்கில் வருணிக்கும் போக்கினைக் காணமுடியவில்;லை. அவர்கள் தங்கள் உடலை இனப்போருக்கான ஆயுதங்களாகவே கருதியுள்ளனர் என்பது புலனாகிறது. பெண்ணுடலைச் சிதைக்கும் ஆணாதிக்கச் சிந்தனைக்கு எதிரான கலகமொழியாக அவர்களின் பெண்மொழி அமைந்துள்ளது என்றால் மிகையில்லை.

**துணைநூல்கள்**

1.அரங்கமல்லிகா, பெண்ணும் பெண்மையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை-98, 2008

2.ஆரோக்கிய ஜெயசீலி.அ, பெண் தன்வரலாற்றுப் பதிவுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை-98, 2015

3.இலக்கியா.க.வி., பெண் விடுதலை இன்று, விடியல் பதிப்பகம், கோவை, 2016

4.ஞானசேகரன்.தே., பெண் வழக்காறுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை-98, 2014

5.நிழல்வண்ணன், குடும்ப அமைப்பு முறையும் பெண்கள் விடுதலையும், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், 2016

6.மீனாட்சி முருகரத்தினம், பெண்ணியச் சிந்தனைகள், பெண்ணிய மனிதநேய நூல் வெளியீட்டு நிறுவனம், மதுரை, 1999